முருகப்பெருமான் துணை

**மகான் அருணகிரிநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.12.2023,** வியாழக்கிழமை

1. யோகராஜனே அரங்கா போற்றி
உயர் ஞானம் தந்தருளும் தவசியே
யுகமாற்றம் செய்தருள வந்த
உயர் ஞானியே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சிலை திங்கள்
அறிவிக்க பஞ்சதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 05 ம் நாள், 21.12.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் அருணகிரிநாதர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
பாரதம் எங்கும் அரங்கன் அறம்
பரவியே மக்களை தேற்றிவர
4. தேற்றிவர கலியுக மக்களும்
தேடியே அரங்கன் குடிலின்
ஆற்றல் அறிந்து சரணாகதி
அடைந்து அருளமுது உண்டு
5. உண்டுமே தரும ஞான வழிகளை
உயர் வழிகளாக ஏற்றுமே
தொண்டர்களாகி தீட்சை தனை
தேசிகனிடம் திருவடி தீட்சையாக
6. ஆகவே ஏற்று மக்கள்
அனுதினமும் ஞானிகள் பூசை
வகைபட செய்து கொண்டு
வல்லமை தரும் அன்னதான சேவையை

7. சேவையை உலகம் எங்கிலும்
செப்பிடுவேன் கிளைகள் அமைத்து
சேவையை வளர்த்து வர
சிறப்பானச் சூழல் பெருகி

8. பெருகியே உலகம் எங்கிலும்
பெருந்தயவு கொண்ட நல்
தருமவான்கள் படைகளாக
தவராஜன் ஆசிபட உருவாகி

9. ஆகியே உலகினில் மாற்றம்
அறம் தரும சக்தி நிறைந்த
வகையான மக்கள் கூட்டமாக
வளர்ந்துமே நல்லத் தலைமை

10. தலைமை வடிவேலனார் ஆசி
தரணியில் கொண்டவர்கள் வழி
பிழைபடா கரைபடா வண்ணம்
பேருலகில் அமைந்து இனிதே

11. இனிதே ஞான ஆட்சியும்
இணையிலா ஞானிகள் ஆட்சியாக
கனிவேலன் தயவுடன் நடக்கும்
கண்டுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—